ANNAMALAI UNIVERSITY TAMIL SERIES.

தித்தன்

பாஷா கவிசேகர மகாவித்வான்
ரா. இராகவையங்கார்
எழுதியது.

அண்ணாமலைநகர்
1949.

ANNAMALAI UNIVERSITY TAMIL SERIES

தித்தன்

RAJAH'S HIGH SCHOOL
RAMANATHAPURAM

பாஷா கவிசேகர மகாவித்வான்
ரா. இராகவையங்கார்
எழுதியது.

அண்ணாமலை யூனிவர்ஸிட்டி
அண்ணாமலைநகர்
1949.

Pandian Press, Chidambaram.
12—5—1949–500 Copies.

பதிப்புரை

பாஷாகவிசேகர மகாவித்வான் ரா. இராகவையங்கார் இப்பல்கலைக் கழகத்து ஆராய்ச்சிப் பகுதி ஆசிரியராக இருந்தபோது அவருடன் நான் பணியாற்றி வந்தேன். அப்பொழுது அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளில் இதுவும் ஒன்று. உறையூர்த் தித்தன் என்று சங்க நூல்கள் கூறுவது கொண்டு, வேளிர் குலத்தவனை இவனைச் சோழர்குல முதல்வனாக வெண்ணினாருளர். அக்கொள்கை தவறென்று பல மேற்கோள்கள் கொண்டு விளக்கி யெழுதப்பட்ட இவ்வாராய்ச்சியுரை கற்றோர் அறிந்து மகிழத்தது. இதனை வெளியிடுதற்கு அநுமதி பளித்த அண்ணாமலைப் பல்கலைக் கழக ஸிண்டிகேட்டிக்கும், விரைவில் நன்கு அச்சிட்டுதவிய பாண்டியன் அச்சகத்தாருக்கும் எமது நன்றி உரித்து.

அண்ணாமலைநகர்,
12—5—49.

E. S. வரதராஜய்யர்,
ஸீனியர் லெக்சரர்.

தித்தன்.

தித்தனைச் சோழனென்று பலர்கருதி எழுதி யுள்ளனர். அவர் அங்ஙன மெழுதற்குக் காரணம் சோழர்க்குரியதென்று பன்னூலானுந் தெளியப்பட்ட உறந்தையை இத்தித்தனுக் குரியதாகப் பரணர் முதலாய நல்லிசைப் புலவர் பாடுதலானும், புறப்பாட் டுரையாளர்

> "இன்கடுங் கள்ளி னுழூ ராங்கண்
> மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
> யொருகான் மார்பொதுங் கின்றே யொருகால்
> வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே
> நல்கினு நல்கா னாயினும் வெல்போர்ப்
> போரருந் தித்தன் காண்கதி லம்ம
> பசித்துப் பணைமுயலும் யானை போல
> விருதலை யொசிய வொற்றிக்
> களம்புகு மல்லற் கடந்தடு நிலையே"

சோழன் போர்வைக்கோப் பெருநற் கிள்ளி முக்காவ னாட்டு ஆமூர் மல்லனைப்பொருது அட்டு நின்றானைச் சாத்தந்தையார் பாடியது."

என்புழி "அக்களத்தின்கட்புக்க அம்மல்லனை எதிர்ந்து நின்று கொன்ற நிலையைக் கண்டால் உவக் கினும் உவவானாயினும் இவன் தந்தையாகிய வெல் லும் போரினையுடைய பொருதற்கரிய தித்தன் காண்பானாக" எனவும் "என்றது தந்தையுடன் வெறுத்துப் போந்தான் அமருட்புகுந்து இப்போர்

செய்தானை அவன் விரும்பின் உவக்கின்றான் விரும்பா விடின் அஞ்சுகின்றான் என்பதாம்'' எனவும் கூறியத னானும், என்று துணியலாகும். இங்கே பெருநற்கிள்ளி என்று வழங்கப்பட்டவன் சோழனே என்பது, பெயரானும்

'' ஆர்நார்ச், செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் (புறம் 81)

எனவும்

'' ஊர் கொள வந்த பொருநனொ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே '' (புறம் 82)

எனவும் வருமிடங்களில் ஆத்திக் கண்ணியும் ஆத்தி மாலையுமே அவனுக்குக் கூறுதலானும், நன் குணரப்பட்டது. புறப்பாட்டுரைகாரர் '' தித்தன் காண்க'' என்புழி '' இவன் தந்தையாகிய தித்தன் காண்பானாக'' எனக்கூறிக் காட்டுதலல்லது மூலத்திற் றந்தையென்ற குறிப்பும் இல்லாமை நினைந்துகொள்க.

தித்தன் வேள்குடியினன் என்பது உறையூர் முதுகூற்றனார் நற்றிணையில்

'' வீரை வேண்மான் வெளியன் தித்தன்
முரசுமுதற் கொளீஇய மாலை விளக்கின் '' (58)

எனப்பாடுதலா னறியப்படும். இதன்கண் வீரை வேண் மான் என்றது இவன் வீரையிலுள்ள வேளிருள் ஒருவன் வழியினனாதல் பற்றி என்றுணரலாம்.

'' அடுபோர் வேளிர் வீரை முன்றுறை '' (206)

என அகப்பாட்டின் வருதலால் வீரை வேளிர்க் குரியதாதல் உணரப்படும். வேண்மான் வேள்மகனைக் குறிப்பதென்பது

"நன்னன் வேண்மான்" (அகம். 97)
"வேண்மா னாஅ யெயினன்" (ஷ. 208)

என வருவனவற்றா னுணரப்பட்டது.

இனி வெளியன் என்னும் பெயர் வேளிர்பாலே வழக்குடைய தென்பது பதிற்றுப் பத்துப் பதிகத்து (உ. ஆம்பத்து)

"வெளியன் வேண்மா னல்லினி யீன்றமகன்"

என்பதனானும்,

"வெளியன் வேண்மா னாஅ யெயினன்" (அ. 208)

என்பதனானும் அறியப்படும். வேண்மான் வேண் மகனெனவும் வேண்மாள் வேள் மகளெனவும் துணிந்து கொள்க.

"வான வரம்பன் வெளியத் தன்ன" (அகம். 359)

என்பதனாற் சேரருடையதென்று தெளியப்பட்ட வெளியத்திலிருந்த ஓர் வேள் தலைவன், வெளியன் என வழங்கப்பட்டன னென்று நினைப்பது தகும். அத்தலைவன் பெயரை அவன் வழியினர் வைத்து வழங்கினராவர்.

இவற்றால் "வீரை வேண்மான் வெளியன் தித்தன்" என்னுந்தொடர், வீரையிலிருந்த வேள் மகனாகிய வெளியனென்பானுக்கு மகனாகிய தித்தன் என்றே பொருள்படும் என்க. தித்தன், தித்தன் வெளியன், வெளியன் தித்தன் என நூல்கள் வழங்குதல் கொண்டு தித்தன் தந்தையும், தித்தன் வெளியன் அவன் மகனும், வெளியன் தித்தன் பேரனும் ஆவரென்று கொள்வாரும் உண்டு.

அங்ஙனங் கொண்டாலும் தித்தன் பேரனென்று நினைக்கப்பட்ட வெளியன் தித்தனை வீரை வேண்மான் எனவிளங்கும் வண்ணம் உறையூரிலிருந்த பெரும் புலவர் முதுகூற்றனார் கூறிக்காட்டுதலால், இவன்குடி சோழர் குடி யன்றென்றும், வேளிர் குடியே என்றும் எளிதிற்றுணியலாம். இவ்வாறு மூன்றுவழி முறையாகக் கொள்ளாது உறையூர் முதுகூற்றனார் தித்தனையே அவன் முன்னையோரூரானும் குடியானும் தந்தை பெயரானும் விசேடித்து "வீரைவேண்மான் வெளியன் தித்தன்" என அவன் வரலாறுதோன்ற எடுத்துக் கூறினார் என்று கருதித் தித்தனும், தித்த மகனாகிய தித்தன் வெளியனுமென இருதலை முறையே கொள்ளுதல் புலவர் கால வளவைக்குப் பொருந்துவதாகும். பரணர்

"தித்தன் உறந்தை" (அகம். 122)

எனவும்

"தித்தன் வெளியன் உறந்தை" (அகம். 226)

எனவும் பாடுதலா னிவ்வுண்மை யுணரலாம். பிறர் நினைக்கின்றவாறு "தித்தன் வெளியன் இவன் மகனும் வெளியன் தித்தன் இவன் பேரனுமாகிச் சோணாடாளும் பேரரசராயின், போர்வைக்கோப் பெருநற்கிள்ளியெனச் சோழர் குடிப்பெயருடன் கோ என்ற பெரும் பெயரையு முன்வைத்து வழங்கப் பெற்றவன் இத்தித்தன் மகனாதல் எங்ஙனமோ தெரிகிலேன். தன் குடித்தலைவன் பெயராகிய வெளியன் என்பதனை மகனுக்குவைத்து வழங்கிய தித்தன் இக்கோவைப் பெருநற்கிள்ளியெனப் பெயரிடற் குடன்பட்டதென்னோ! தித்தன் காண்க

என்றதனைப் பிறர் கருதுமாறு தந்தையாகிய தித்தன், இப் பெருநற்கிள்ளி கோ என வழங்கப்பட்ட காலத்தே உளனாகத்தானே துணியவேண்டும். தந்தையாகிய தித்தன் பேரரசனாகி உயிர்வாழும்போது இப் பெருநற்கிள்ளி கோவாதலெங்ஙனமோ.

இனி,

"என்னை, புற்கையுண்டும் பெருந்தோ ளன்னே"

(புறம். 84)

என்பதனுரையிற் புறப்பாட்டுரைகாரர் "தன் னாடிழந்த வறுமையாற் புற்கை நுகர்ந்தானாயினும்"

என்றுரை கூறிச் சென்றார். "தன்னாடிழந்த வறுமை" என்பது தன்னுடையதாகித் தானாளும் நாட்டையிழந்த நல்குரவு என்றே பொருள்படும். உரைகாரர் பேரரசனாகிய கோச் சோழன் புற்கையுண்டல் எவ்வாறு பொருந்துமென்று தம்முள் வினாவிக்கொண்டு, அதற்கு அவன் தன்னாடிழந்த வறுமையை ஏதுவாக்கினரென்று தெரியலாகும். இவன் நாடிழந்து புற்கையுண்டற்கு முன்னே பெரும் படையுடைய பேரரசனாக இருந்தவனென்பது 81–ஆம் புறப்பாட்டில்

"ஆர்ப்பெழு கடலினும் பெரிதவன் களிறே
கார்ப்பெய லுருமின் முழங்கலா னாவே
யார்கொ லளியர் தாமே யார்நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைப்பட் டோரே"

(அவனை அவர் சாத்தந்தையார் பாடியது) என் பதனாலறியலாம். இப்பாடலில் "தித்தன் காண்க" என்ற சாத்தந்தையாரே இக்கோப் பெருநற்கிள்ளிக்கு

எழுகடலினுமேம்பட ஒலிக்கும் படைப் பெருக்கும், கார்காலத்து மழையின் இடியினு முழங்குங்களிறு களும், சோழர் குடிக்கே சிறந்த ஆத்திக் கண்ணியும் இடக்கவிந்தகையும் சிறப்பாகக் கூறுதலானன்கறிந்து கொள்க. உண்மையிற்றந்தை தித்தனேயாயின் அவன் உள்ளனுகி உறையூரையாளும் அங்கிலேயில் அவன் மகனெனப் பட்டவன் கோ எனச் சிறப்பித்து வழங்கப் பெருனென்க. இவன் தந்தை எனப்பட்ட தித்தனுக்கோ, அவன் வழியரசரென்று நினைக்கப் பட்ட தித்தன் வெளியன், வெளியன் தித்தன் என்னும் அவர்க்கோ, இக்கோப் பெருநற்கிள்ளியைப் போல ஆர்நார்த் தொடுத்த கண்ணி "ஆர்புனை தெரியல்" (புறம். 82.) கூறப்படாமை தொகை நூல்களை நோக்கித் தெளிக. கரிகால் வளவனைக் "கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" எனப்பொருந ராற்றுப் படையினும் திருமாவளவனைக் "கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ" எனப் புறப்பாட்டினும் (39) பொதுவாகச் சோழரை" ஆரங்கண்ணி யடுபோர்ச் சோழர்" என அகப்பாட்டினும் (93) வழங்குதல் கொண்டு இக்குடிக்குச் சிறந்த அடையா ளம் ஆத்தியாதல் கண்டுகொள்க.

மற்று உறந்தையைத் தித்தன் ஊராகப் பரணர் 6, 122-ஆம் அகப்பாட்டுக்களிலும், நக்கீரர் 395-ஆம் புறப்பாட்டிலும் கூறியது, அவன் அவர் காலத்து அவ்வூரிலே வதிந்து வழங்கி வாழ்தலா லென்று துணியலாம். இத்துணிபு "சிறுகண்யானைப் பெற லருந்தித்தன் செல்லா நல்லிசை யுறந்தை" (புறம் 395) எனப்பாடும் நக்கீரரே

"கடலந்தானைக் கைவண் சோழர்
கெடலரு நல்லிசை யுறந்தை" (அகம். 369)

எனவும்,

"ஆரங் கண்ணி யடுபோர்ச் சோழர்
அறங் கெழு நல்லவை யுறந்தை" (அகம். 93)

எனவும் பாடிக் காட்டுதலான் வலியுறுதல் காண்க. பரணர் அகப்பாட்டில் (186) "பழையன் காவிரிவைப்பிற் போஒரன்னவென் செறிவளை" என்பதனுற் பாடிய பழையனைக் குடவாயிற் கீரத்தனர் அகப்பாட்டில் (44) பழையன் பட்டெனக் கண்டது நோனுகித் திண்டேர்க், கணையனகப்படக் கழுமலந்தந்த, பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி" எனப் பாடுதலான். பரணர் காலத்தவ ரென்று துணியப்பட்ட இக் குடவாயிற் கீரத்தனர் அகப்பாட்டில் (385) "கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர், காவிரிப்படப்பை யுறந்தை" எனப் பாடிக் காட்டுதலையும் இங்கு நோக்கிக் கொள்க. பரணர் பாடிய கணையனை (அகம். 386) க்குடவாயிற் கீரத்தனர் பாடுதலும் (அகம். 44) கண்டு இவ்வுண்மை யுணர்க.

ஒரு கொடையாளியாகிய வீரன் எவ்வூரில் வதிகின்றானே அதனை அவனூராகப் பாடி அஃது எப்பெரு வேந்தர்க் குரியதோ அதனையும் அமயநேர்ந் துழியெல்லாம் தெரியவைத்தல் பண்டை நல்லிசைப் புலவர் வழக்காதல் தொகை நூல்களாற் றெரிந்ததே யாம். நக்கீரனர் நித்தனுறந்தை எனவும் சோழ ருறந்தை யெனவும் பாடுதல் கொண்டு நித்தனே

சோழர் குடியின னென்னலா மெனின் அது 'மத்திகழாஅர்' (அகம். 6) எனவும், 'சோழர்கழாஅர்' (நற்றிணை. 281) எனவும், நூல்கள் வழங்குதல் கொண்டு மத்தியும் சோழர் குடியினன் என்று ஒருவர் சொல்லத் துணிவதேபோலுமென்க. மத்தி சோழர் குடியினனாகாது பரதவர் குடியினனவன் என்பது

"பரதவர் கோமான் பல்வேல்மத்தி கழாஅர்" (அகம். 226)

என்பதனான் நன்கறியப்பட்டதாம். சிற்றரசன் உள்ள ஊரை அவனூராகச் சிறப்பித்துப் பாடுதலும் அவ்வூரை யுள்ளபடியே அந்நாட்டுப் பேரரசர்க் குரியதாகப் பாடுதலும் வழக்கே என்பது,

"அம்பர் கிழவோ னருவந்தை" (புறம். (385)
"கிள்ளி யம்பர்" (நற்றிணை. 141)

எனவும்

"அழிசி யார்க்காடு" (நற்றிணை, 190)
"சோழ ரார்க்காடு" (நற்றிணை. 227)

எனவும் வருவனவற்றா னன்குணரலாம். இவ் விடங்களில் அருவந்தை சோழர் மரபின னென்றே னும் சோழரால் வெல்லப்பட்டன னென்றேனும் கூறுதற்கு நூல்களிலாதார மில்லாமை நோக்குக. இவ்வாறே அழிசி சோழர் குடியின னென்றேனும் சோழரால் வெல்லப்பட்டன னென்றேனும் கூற லாகாமையுங் கண்டுகொள்க. சோழருடையவற்றைக் கூறியது போலவே பாண்டியருடைய ஊரையும் மலையையுங் கூறுதல்.

1. கபிலர் புறப்பாட்டு 347 "அகுதை - கூடல்"
பரணர் அகப்பாட்டு 116 "செழியன் - கூடல்"

பரணர் காலத் தவரான
குடவாயிற் கீரத்தனர் அகம். 315 " வழுதி கூடல் '

எனவும்

2. புறம். 128. " ஆஅய் பொதியில் "
அகம். 322. " திதியன் பொதியில் "
அகம். 138. " தென்னவன் பொதியில் "

எனவும் வருவனவற்றால் உணரலாம். ஈண்டு அதுதை பாண்டியர் மரபின னென்றேனும் பாண்டியரால் வெல்லப்பட்டன னென்றேனும் கருதற்கு மேற்கோள் கிடையாமை காண்க. இவ்வதுதை கொற்கையிலிருந்த பாண்டியற்குப் பகையாய்க் கூடலிலிருந்தவ னென்றும் அவனால் வெல்லப்பட்டா னென்றும் பலவாறு கூறினருமுண்டு. அவர் அங்ஙனங் கருதற்கு மேற்கோளாக எடுத்துக் கொண்டது.

" பேரிசைக் கொற்கைப் பொருநன் வெள்வேற்
கரும்பகட் டியானை நெடுந்தேர்ச் செழியன்
மலைபுரை நெடுநகர்க் கூட னீடிய
மலிதரு கம்பலை போல
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே " (அகம். 296)

எனவரும் மதுரைப் பேராலவாயார் பாடற் பகுதியாகும். ஈண்டுக் கொற்கைப் பொருநனாகிய செழியன் கூடல் வரை படை யெடுத்து நீளவந்ததனு லாகிய கம்பலை போலப் பலர் வாய்ப்பட்டு அலராகின்றது என்று அவர் பொருள் கொண்டனர். அவர் கருத்துப்படிச் செழியன் கூடற்கு நீளப்படை யெடுத்து வந்ததனுலாகிய கம்பலை யென்றுதானே பொருள்கொள்ள வேண்டும். செழியன் கூடனீடிய மலிதரு கம்பலை என்பது இப்பொருள் கொள்ளக்

கிடப்பதா என்று அறிஞரே ஆராய்ந்து கொள்வாராகுக. கிடந்தபடியே செழியனது கூடலின் நீடிய கம்பலை என்று கொள்ளமாட்டாது கூடலிற் செழியன் (படையெடுத்து) நீடிய கம்பலை என்றும் அக்கம்பலை போர்ப்படை யெடுப்பாணுகிய தென்றும் ஈண்டுத் துணிவது இயலாதென்க. பரணரது 116-ஆம் அகப்பாட்டிற் போலச் செழியன் கூடலென்றே கொள்ளவேண்டு மென்க. போர் வென்றியின் கொண்டாட்டத்து ஆர்ப்பு ஆயின்

"கொங்கரோட்டி...... .....பாண்டியன் கூடல்
ஆடிய வின்னிசை யார்ப்பினும் பெரிதே" (அகம். 253)

என்முற்போல விளங்க வுரைப்பரென்க. அப்பிறர் கொற்கைப் பொருநனாகிய செழியனுடைய கூடலில் நீடிய கம்பலை போல அலராகின்றது என்று கொள்ளவறியார். பெருநகரங்களிற் கம்பலை கூறுதல் பண்டைத் தமிழ் வழக்கெனை அவர் நினைந்திலர். கூடல் நீடிய கம்பலை - கூடலில் நெடும் போதைக்கு நிளநின்ற கம்பலை எ. று. கம்பலை - ஆரவாரம். கூடலைக் கலிக்கம்பலையாற் கூறுதல் "கலிகெழுகூடல்" என்னுந் தொடரானறிக. கூடலிற் பல்வேறு கம்பலை நாடோறு நீடிமலிதல்.

"வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கி
முந்தையாமஞ் சென்றபின்றை"

என மதுரைக் காஞ்சியுள் மாங்குடி மருதனார் பாடுதலான் அறிக: இதுவே தமிழ் வழக்காதல்

"எங்கோ னிருந்த கம்பலை மூதூர்" (புறம். 54)

எனவும்

“கம்பலை மூதூர் [illegible] மணிமேகலை. 3—12[illegible]

எனவும்

“இருமென் சும்மை யிடனுடை வரைப்பின்”
(பொருநராற்றுப்படை)

எனவும் வருவன கொண்டுணர்க. இவ்வூர்க் கம்பலைகளையும் அலர்மிகுதிக்கு மகளிர் எடுத்துக் கூறுதல் பண்டை வழக்கேயா மென்பது

“மருங்கூர்ப் பட்டினத் தெல்லுமி ழாவணத் தன்ன
கல்லென் கம்பலை செய்தகன் றோரே” (அகம். 227)

எனவரும் பரணர் வாக்கா னறியலாம்.

பிறர், செழியனென்பான் கூடலில் நெடுநாட் டாழ்த்ததனு லுண்டாகிய கம்பலை என்றுதான் இப் பகுதி வேறொரு பொருள் கொள்ளப்படு மென்றும் அவ்வாறு கொண்டால் கூடலிற் பாண்டியன் தாழ்த் திருப்பது கம்பலை யுண்டாக்குவதி யாங்ஙனமென்றும் வினவிக் கொண்டு, கொற்கைச் செழியன் கூடற்கு நீளப்படையெடுத்துவந்த கம்பலை என்று தாந்துணிந்த தாக விளக்கியுள்ளனர். இவ்விரு பொருளும் இப் பாடற் பகுதி ஏற்கா தென்றும் கொற்கைச் செழிய னுடைய கூடலில் நீடிய நிறைந்த ஆரவாரம் என்பது தான் ஏற்பதாகுமென்றும் யான் மேலே யெடுத்துக் காட்டிய பெருநகர்க் கம்பலைகளை நோக்கித் தெளிக. நகர்க் கம்பலை யொழிந்த போர்க் கம்பலைகளையும் பிற ஆரவாரங்களையும் உவமிக்கு மிடத்து அவற்றின் செய்தி தெரியப் பாடுதல் தமிழ் வழக்கே யென்பது

“களிறுகவர் கம்பலை போல” (அகம். 76)

எனவும்

“நீறுதலைப் பெய்த ஞான்றை யார்ப்பினும்” (அகம், 256)

எனவும் வருமிடங்களிற் கண்டுகொள்க. அவர் காட்டிய அகப்பாட்டுப் பகுதிக்குக் கொற்கைத் துறையுடையவனாகிய செழியனுடைய தலைநகராகிய கூடற்பகுதியினீடிய பெருங் கம்பலைபோல நீ பரத்தை யோடாடியது பலர்வாய்ப்பட்டு அலராகின்றது என்பதுதான் பொருளாம். "கொற்கைக் கோமான் செழியன் தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின் மதுரை' என்பது (சிறுபாண்) கொண்டு உண்மை யுணர்க. கடற்பட்டினமுந் தலைநகருஞ் செழியனுடைமை குறித்தாரென வறிக. கூடற் கம்பலைபோல் அலர் நீள நிறையப் பரந்தது என்பது கருத்தாகக் கொள்க. இப்பகுதி கொற்கைத் துறைவனாகிய செழியன் கூடற் பதிக்குப் படையெடுத்து நீள வந்ததனாலாகிய கம்பலை போல அலராகின்றது என்று நினைத்தற்கு மிடந் தராமை மூலத்தை நோக்கியறிக. கூடனீடிய கம்பலை போல அவ்வளவு பெரிதாகின்ற தெங்ஙனமெனிற் பலர் வாய்ப்பட்டுப் பெரிதாகின்ற தென்றதாகக் கொள்க. கபிலர்க்கு ஒத்த காலத்தவரென்று கருதப் படும் பரணர் "செழியன் கூடல்" (அகம் 116) என்ற தனையே கபிலர் அகுதைகூடல் (புறம்) எனப் பாடுதலானும் அகுதையுள்ள கூடல் செழியனதாதல் நன்கு தெளியப்படுமென்க. இவர்க்கொரு காலத் தவரான குடவாயிற் கீரத்தனாரும், "வழுதிகூடல்" (அகம் 315) எனக் கூறுதல் காண்க.

இனித் தித்தனுறந்தை யென வருதல் பற்றித் தித்தனை உறையூர்ச் சோழர் குடியினனென்றாற் போல "அகுதை கூடல்" (புறம் 347) என வருதல் கண்டு அகுதையைப் பாண்டியன் என்று துணிந்தாரு

முண்டு. உறந்தை யென்னும் ஊரடையாளத்தைக் கொண்டு நித்தனைச் சோழர் குடியினனென்றற்கண் எவ்வள விடர்ப்பாடுண்டோ அவ்வளவும் கூடற்பதி யடையாளமே கொண்டு அகுதையைப் பாண்டியர் குடியினன் என்றற்கும் உண்டாதல் கோசர் வரலாற் றிற் கண்டு கொள்க.

இனி "அகுதை கூடல்" என்ருற்போலச் சோழர் உறந்தையைக் "கோசன் செருந்தை யுறந்தை" எனப் பாடலுட் பயின்றதும் உண்டாதலான் இவ்வுண்மை எளிதின் உணரலாம். இதனை யாப்பருங்கலவிருத்தி உரை மேற்கோளில்

"பல்லார்க்கு மீயும் பரிசிற் கொடைத் தடக்கை
மல்லார் மணிவரைத்தோள் வண்கோசன் - மல்லலந்தார்ச்
செஞ்சொற் செருந்தைதன் றென்னுறந்தை யென்ருளும்
வஞ்சிக்கொடி மருங்குல் வந்து"

(ஒழிபியல் - உரை)

இப் பாட்டினுள் நித்தனுக்குக் கூறுதல் போலப் பெருங் கொடையும் பெருவலியும் உறையூரும் கோசனுகிய செருந்தைக்கும் கூறுதல் கண்டு தெளிக. பேரரசர்க்குத் துணைவலியாய சாமந்தர்கள் தமிழ் நாட்டுத் தலைநகர்களில் மாளிகையமைத்து வாழ்ந லுண்டென்றும், அவர் கொடைப்பெருக்கும் படைத் தலைமையும் பாராட்டி அவரவரை அத்தலைநகரினராக வைத்துப் பாடுதல் வழக்காமென்றும் இதனுல் நன்கு துணிக. சேரர் தலைநகரான வஞ்சியுள் வேளாவிக் கோமானுக்கு மாளிகையுண்டென்பது "வேளா விக்கோ மாளிகை காட்டி"

என இளங்கோவடிகள் கூறுதலான் அறியலாம். சோழன் கரிகால்வளவன் மகளை மணந்த அத்தி என்பவன் "வஞ்சிக்கோன்" என வழங்கப்படுதல் சிலப்பதிகார வழக்குரை காதையான் அறிந்தது. இவ்வத்தி, சேரன் படைத் தலைவருள் ஒருவன் என்பது பெரும்பூட் சென்னி பொருது சேரனது கழுமலங் கொண்ட போரில், சேரனுக்குப் படைத்துணையாய்ப் பொருத பலருள் "நன்னனேற்றை நறும்பூணத்தி" (அகம் 44) என இவ்வத்தி கூறப்படுதல் காண்க. இராச குலத்திற் பிறந்ததே கொண்டு அரசாளாவிடினும் அப் பலரையும் அரசராகவே உபசரித்து வழங்கல் "ஒத்த பண்பினரொன்பது மன்னர்" எனச் சிலப்பதிகார நீர்ப்படைக் காதையி னிளங்கோவடிகள் வழங்குதலானறியலாம். சோழனொடு ஒன்பது மன்னரால் ளப்படுவ தென்பது இயையாமை காண்க. இவ்வத்தியைப் பொருநன் (அகம்) என்றது பொருகின்ற வீரனுதல் பற்றி. 'ஊர்கொள வந்த பொருநன்" (புறம் 82) எனவும் "மாந்தையோர் பொருந" (பதிற்றுப். 90) எனவும் வருதல் காண்க. இவனை ஆதிமந்தி ஆடுகள மகன்" (குறுந். 31) என்றது ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்போற் 'போர்க்களத் தாடுங்கோ' (பதிற் 56) ஆதல்பற்றி யென்றுணர்க. ஆதிமந்தி 'பீடுகெழு குரிசிலுமாடுகளமகனே' (குறுந். 31) என்றதுங் காண்க. ஈண்டுப் "பீடுகெழு குரிசில்" என்றதற்கேற்பக் "கடுந்திறலத்தி" (அகம்) என வருதலுங் காண்க. ஆதிமந்தி தன்னை ஆடுகள மகனென்றது வில்லோர் களத்தும், மகளிர் துணங்கையாடுங் களத்தும் அப்போது சுற்றித் திரிதலான் என அறிக. இவற்றாற் பேரரசர் தலைநகர்களிற் சாமந்த ராசர்க்கு

மாளிகை யுண்டென்றும், அச்சாமந்தர் அங்கர்களிற் றம் பிறந்தநாட் கொண்டாட்டத்து வரையாது வழங் கலைப் பாராட்டிப் புலவர் அவரை அவ்வூரிலே பாடுவ துண்டென்றும் நன்கு துணிக. தித்தனுறந்தை என் றதே கொண்டு தித்தனைச் சோழனாகத் துணிவது ஒருவர்,

"செஞ்சொற் செருந்தைதன் றென்னுறந்தை யென்றுளும்
வஞ்சிக் கொடிமருங்குல் வந்து"

என்ற அடிகளையே கண்டு வண்கோசனாகிய செருந்தையைச் சோழனாகத் துணிவதே போலு மென்க. இன்னும், "புல்லி வேங்கடம்" (அகம் 61)

எனவும்,

"தொண்டையர் வேங்கடத்தும்பர்" (அகம் 213) எனவும் வருவனவற்றைக் கண்டு புல்லி தொண்டைய னாவனெனத் துணிவதும் போலு மென்க. புல்லியைக் "கள்வர் கோமான்" (அகம் 61) என்பத னால் அவன் கள்வர் குடியினன் எனத் துணிந்தா மெனின் "சோழுருறந்தை" (அகம் 137) எனப் பாடு கின்ற உறையூர் முதுகூற்றனாரே நற்றிணை 58 ஆம் பாட் டில் "விரை வெண் மான் வெளியன் தித்தன்" எனத் தித்தன் குடி தெளியப் பாடிக் காட்டுதலான், வேள் குடியினன் தித்தன் என்பது துணியப்படுமென்க. நன்னன் வேண்மான், வேண்மாளு அயெயினன் என வருதல் கொண்டு வேண்மான் வேண்மகனாதல் தெளிக. இவன் வேளிர் குலத்தவன் என்று தெளிய வுரைத்த இதற்கு மாறாக இவனைச் சோழனாக்குவதற்

குரிய ஏது 'தித்தனுறந்தை' என்பதே யாதல் உணர்க இது செருந்தை யுறந்தை போல்வதாதல் நன்கறியலாம்.

மற்று முதுகூற்றனார் நற்றிணையில் (58), "வீரை வேண்மான் வெளியன் தித்தன் முரசுமுதற் கொளீஇய மாலை விளக்கின்" என்றதனால் இவன் முரசுடைச் செல்வனும்

"பரணர் வலிமிகு முன்பிற் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளிய னுறந்தை நாளவைப்
பாடின் றெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய வார்ப்பினும் பெரிதே"
(அகம் 226)

எனக் கூறியதனால் இவன் நாளோலக்கமுடைய பேரரசனுமாவன் எனக் கொள்ளலா மெனிற் கூறுவேன். சிற்றரசனாகிய காரிக்கு

"முள்ளெயிற், றரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப
அண்ணல் யானையொடு வேந்துகளத் தொழிய
அருஞ்சமந் ததையத் தாக்கி"
(புறம் 126)

என்பதனால் முரசும்

"நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின்"
(புறம் 123)

என்பதனால் நாளோலக்கமுங் கூறுதலான் இவை கொண்டு பேரரசனெனத் துணியலாகாமை தெளிக. "நாட்கள் ளுண்டு" என்ற புறப்பாட்டில் "மகிழா தீத்த விழையணி நெடுந்தேர்" என்றது நாண்மகிழ்

மகிழாதித்த .... தேர் எனவே பொருள்படுதல் நோக்கி யறிக. சிற்றரசனாகிய குமணனை

"நாண்முர சிரங்கு மிடனுடை
வரைப்பினின் னாணிழல்"
(புறம் 161)

என்பதனானும் இவ் வழக் குணரலாம். கோச் சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை துஞ்சிய போது கூடலூர் கிழார்,

"திண்பிணி முரசங் கண்கிழிந் துருளவும்"
(புறம் 229)

எனப் பாடியது போலவே வெளிமான் துஞ்சிய போது பெருஞ் சித்திரனார்

"தோடுகொண் முரசுங் கிழிந்தன கண்ணே"
(புறம் 238)

எனப் பாடுவது கண்டு இதனுண்மை யுணர்க. சிற்றரசர் பிறந்த நாள் விழவுகொண்டாடுதல்,

"பேரிசை நன்னன் பெரும் பெயர் நன்னாட்
சேரிவிழவி னார்ப்பெழுந் தாங்கு"

என மதுரைக் காஞ்சியுள் வருதலானறிக.

"பாண ரார்ப்பப் பலகல முதவி
நாளவை யிருந்த நனைமகிழ்த் திதியன்"
(அகம் 331)

என்பதனானும் சிற்றரசர் நாளவையின் வீற்றிருத்தல் உணரப்படும். மற்றுத் திததனைச் சிறப்பித்த

கொடை, படை, வீரம், யானை குதிரை முதலியன பலவும், வேள்பாரி, வேள் ஆய் முதலிய சிற்றரசர்க்கும் புலவர் வழங்குதல், அவரவர் பாடல்களிற் பரக்கக் காணலாம். குறுநில மன்னர்க்கு இச் சிறப்புக்கள் பலவும் உண்டென்பது

"வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப வவர்பெறும்பொருளே"
(81) எனவருந்

தொல்காப்பிய மரபியற் சூத்திரத்தான் உணர்க. இச் சங்ககால வழக்கே நெடுங்காலத்திற்குப் பிந்தியும் தொடர்ந்து வந்ததென்பது,

தொண்டை நாடு பரவின சோழன் பல் யானைக் கோக் கண்டனுயின ராசகேசரி பத்மனும் சேரமான் கோத்தாணு இரவியாலும், தவிசும் (அரசுகட்டில்) சாமரையும், சிவிகையும், திமிலையும், கோயிலும், போனகமும், களிற்று நிரையும், "செம்பியன் றமிழவேள் என்றுங் குலப்பெயரும் பெற்ற விக்கியண்ணன்" என்பதனை னறியலாம். (தென்னிந்தியச் சாசனம்; பகுதி III. X.

இனிப் பரணர்க்குச் சிறிது மூத்தவராகக் கருதப்படும் மாமூலனுர் "தமிழ் கெழு மூவர் காக்கு மொழி பெயர் தேஎத்த பன்மலை" (அகம் 31) எனவழங்கிக் காட்டுதலான், இத் தமிழ் நாடு அவர் காலத்தும் மூவர்க்கே உரியதென்பது நன்கு துணியப்படும். அவர் மூவரையும் முறையே வானவரம்பன் (அகம் 359) சேரல் (அகம் 65, 347) எனச் சேரனையும், "பாண்டியன்" (அகம் 201) எனக் கொற்கைத்துறைவனையும், செம்பியன் (நற்றிணை 14) எனச் சோழனை

யும் கூறுதல் காணலாம். இம் மாமூலனார் பரணர் பாடிய ஏழில் மலை நன்னனையும் (அகம் 349) பாணனையும் (அகம் 325) கட்டியையும் (குறுந்தொகை 11) பாடுதல் கண்டு கொள்க. பரணர் நன்னனைப் பாடுதல் "நன்னனேழி னெடுவரை" (அகம் 152) என்பதனானும், பாணனையும் கட்டியையும் பாடுதல்,

"வலிமிகு முன்பிற் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளிய னுறந்தை நாளவைப்
பாடின் றெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய வார்ப்பினும் பெரிதே"
(அகம். 226)

பாணன் கணையன் காலத்தவன் என்பது மல்லடு மார்பின் வலியுற வருந்தி, எதிர்தலைக் கொண்ட வாரியப் பொருந, னிறைத்திரண் முழவுத்தோள் கையகத் தொழியத், திறன் வேறு கிடக்கை நோக்கி நற்போர்க் கணையனுணி யாங்கு (அகம் 386)

எனப் பரணர் பாடுதலா னறிந்ததாம். கட்டியும் கணையன் காலத்தவனாய் அவனுக்குப் போரிற் றுணையாயவனென்பது.

"நன்ன னேற்றை நறும்பூ ணத்தி
துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் பொன்றுறை யென்றாங்
கன்றவர் குழீஇய வளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனுகித் திண்டேர்க்
கணைய னகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி
(அகம். 44)

என வருதலானும், "நன்னன் முதலாயினேர் சேரன் படைத் தலைவர், பழையன் சோழன் படை முதலி, கணையன் சேரன் படைமுதலி முன்சொன்ன வர்க்குப் பிரதானி" என்னும் அதன் பழைய வுரையா னும் நன்கறியலாகும். இப் பாட்டினுலும் பரணர் பாடிய தித்தன் நாளவைக் கிணைப் பறையொலிகேட்டோடிய கட்டியும் பாணனும் கணையன் காலத்தவ ரென்றும் இதனுற் றித்தன் கட்டி பாணன் கணையன் என்னும் நால்வரும், கழுமலந்தந்த பெரும்பூட் சென்னி என் னுஞ் சோழன் காலத்தவ ரென்றும் ஐயமறத் தெளிய லாம். இக்கழுமலந்தந்த பெரும்பூட்சென்னி பொய்கை யாராற் களவழி பாடப் பட்டவன் என்பது,

> "காவிரி நாடன் கழுமலங் கொண்டநாண்
> மாவுதைப்ப மாற்ருர் குடையெலாங் கீழ்மேலா
> யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
> மேவாரை யட்ட களத்து"
>
> (களவழி. 36)

என வருதலான் அறிந்ததாகும். இதன் கட் 'கழுமலங் கொண்டநாட் புனனாடன் மேவாரை யட்ட களத்து' என்பதனுற் குறித்த செய்தியும், "பழையன் பட்டெனக் கண்டது நோனுநிக் கணையனகப்படக் கழுமலந்தந்த" செய்தியும் ஒன்றேயாதல் நோக்கிக் கொள்க. கழுமலம் சேரனுடைய ஊர் என்பது "குட் டுவன் கழுமலத்தன்ன" (அகம் 270) என வருதலான் அறியலாம். களவழியிற் பொய்கையார் பல்லிடத் தும் இக் கழுமலங் கொண்ட செம்பியனைச் செங்கண் மால், செங்கட்சினமால் என வழங்கிக் காட்டுதலான் இவன் சோழன் செங்கணன் எனப் பெயர் சிறப்ப

னென்று துணியலாம். "கணையனகப்படக் கழுமலந் தந்த ...... செம்பியன்' என்றதனாற் கணையனும் இப் போரில்வகப்படுத்தப் பட்டானென்பது நன்குணரலாம். இவன் பெருஞ் சேரனாகிய குட்டுவனுக்குப் பிரதானியாய்ச் சேரன் உறவினனாகிய சேரன் கணைக்காலிரும் பொறையென்னப் பெயர் பெற்றவனாவன். "குட்டுவன் கழுமலத்தன்ன" (அகம் 270) எனக் கூறுதலான் இவ்வாறு துணிவதே பொருத்தமாமென்க. இருமுறை சோழர் கழுமலங் கொண்டதாக நூல்களிற் கேட்கப் படாமையும் நன்கு நோக்கிக்கொள்க. இவ்வரலாறே மாமூலனாரால் "குட்டுவனகப்பா வழிய நாறிச் செம்பியன் பகற்றீ வேட்ட ஞாட்பினும்" (நற்றிணை 14) எனப் பாடப்.பட்டதென நினையத்தகும். அகத்திற் சோழன் கணையனகப்படக் கழுமலந் தந்த வரலாற்றிற் சோழன் படை முதலியாகிய பழையன் பட்ட வரலாறுங் கூறியவர் குடவாயிற் கீரத்தனார். இக்குடவாயிற் கீரத்தனார் கூறிய பழையனையே பரணர் — "வென்வேல்

மாரியம்பின் மழைத்தோற் பழையன்
காவிரி வைப்பிற் போஒ ரன்னவென்
செறிவளை" (அகம் 186)

என்பதனாற் பாடுதலான் இப் புலவரிருவரும் ஒரே காலத்தவராதல் தெள்ளிது. பரணரொடு ஒத்த காலத்தவரெனத் தெளியப்பட்ட இக் குடவாயிற் கீரத்தனார்

"கைவல்யானைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப் படப்பை யுறந்தை"

(அகம் 385)

எனப் பாடுதலாற் பரணர் காலத்தும் உறந்தை சோழரதாதல் தெளியப்படு மென்க. பரணர் காலத்தே வேள் தித்தனல்லாது சோழனே பெருவேந் தனு யுளனென்பது

"வெள்வேல் விழையணியானைச் சோழன் மறவன்
கழையளந் தறியாக் காவிரிப் படப்பை
புனன்மலி புதவிற் போஓர் கிழவோன்"
பழையன் (அகம் 326)

என்பதனால் நன்கறியப்பட்டது. இதற்கேற்ப நற்றிணையில் (10) "நெடுந்தேர்க் கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர் வெண்கோட்டியானைப் போஓர் கிழவோன், பழையன் வேல்வாய்த்தன்ன நின் பிழையா நன்மொழி" என வருதலுங் காண்க. பரணர் காலத்தே சோழர் நெடுந்தேருடையராயும் கொற்றமுடையராயும் இருந்தன ரென்பதும் தம்மோ டொத்த கொங்கரை (சேரரை)ப் பணித்தற்குப் பழையன் வேற்படை வாய்த்தன ரென்பதும் தெளிய லாம்.

"பரணர் நற்றேர்க் கடும்பகட்டியானைச் சோழர் (அகம் 356) எனப் பாடுதல் கொண்டு இவர்காலத் துச் சோழன் தலைமை யுணரப்படும். உறையூர் முது கூற்றனார் "வீரைவேண்மான் வெளியன் தித்தன்" (நற்றிணை 58) என ஒருமையிற் பாடியவர் 'சோழ ருறந்தை' (அகம் 137) எனப் பன்மையிற் பாடுத லான் தித்தனுண்டாதற்கு முன்னே சோழர் பலருண் டாயினது உணரப்படு மென்க. இவரும் பரணரும் சோழரெனப் பன்மையாற் கூறியது கொண்டு இவ்

வுண்மை யுணர்க. இத்தனைப் பாடியவரே சோழ நூறந்தை யெனப் பன்மையிற் பாடியது புலப்பட்டதனால், இத்தன் சோழர் குல முதல்வனென்னும் பிறர் கொள்கை. நிலையா தொழிதல் கண்டுகொள்க. இத்தனைப்பாடிய பரணரே சோழன் கரிகாற்பெருவளத்தானை,

வெருவருதானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லாச்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
வொன்பது குடையு நன்பக லொழித்த
பீடின் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடைநீ யெமக்கே.

(அகம் 125)

எனவும்

"தாய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்"

(அகம் 246)

எனவும்

"ஒலிகதிர்க் கழனிக் கழார் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காண"

(அகம் 376)

எனவும்

கரிகாற் சோழன் தந்தை உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியை,

"நீயே, அலங்குளைப் பரீஇ யிவுளிப்
பொலந் தேர்மிசைப் பொலிவு தோன்றி
மாக்கட னிவந் தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ"

(புறம் 4)

எனவும் பாடுதலாற் பரணர் காலத்தேயுள்ள சோழர் பேரரசினிலை நன்குணரலாம். இப் பரணரோ டொப்பப் (புறம் 144, 145) பேகனைக் கண்ணாகி காரணமாகப் பாடியதனுல் (புறம் 147) அவரோ டொரு காலத்தவரென்று துணியப்பட்ட பெருங்குன் றூர் கிழார், இக் கரிகாற் சோழன் தந்தையை "நீர் திகழ்கழனி நாடுகெழு பெருவிறல் வான்ருேய் நீள் குடை வயமான்சென்னி" (புறம் 266) எனப் பாடுத லானும் இக்கருத்து வலியுறும். ஈண்டு நீர்நாடுடைய ணுகச் சென்னியைக் கூறுதலான் நாடு சோழரதும் தலைநகர் ஒரு வேண்மானுடையதுமாக இருந்த தென்று துணிதலியையாதாமென்க. இப் பெருங் குன்றூர் கிழார் தாம் பாடிய இளஞ்சேரலிரும் பொறைக்குச் சோழர் பெருமான் ஒருவன் தோற்ற செய்தி, பதிற்றுப்பத்து 85-ஆம் பாட்டிற் கூறுகின் ருர். இதனை "சென்னியர் பெருமானிட்ட வெள்வேன் முத்தைத் தம்மென" என்பது முதலாக வருந் தொடர்க்குப் பழைய வுரைகாரர் "இளஞ்சேர லிரும் பொறை சென்னியர் பெருமானுடைய நாடுகள் பல வற்றையும் எமக்குக் கொண்டு தந்து அச் சென்னியர் பெருமானை எம்முன்னே பிடித்துக்கொண்டு வந்து தம்மின் எனத் தம் படைத் தலைவரை ஏவச் சென்னி யர் பெருமான் படையாளர் பொருது தோற்றுப்போ கட்ட வெள்வேல் .... கபிலன் பெற்றவூரினும் பல" வெனக் கூறுதலானறியலாம், ஒன்பதாம் பத்துப் பதிக மியற்றியவர், இச் சென்னியர் பெருமான் "பொத்தியாண்ட பெருஞ் சோழன்" என்று கொண டார். இவற்ருற் பரணர், கபிலர், பெருங்குன்றூர் கிழார் என்னுமிவர் காலத்தே சோழர்கள் பெருநிலை

யில் வாழ்தல் நன்கு துணியலாம். "ஆர்கலியினனே சோணாட்டண்ணல், கவிகை மண்ணாள் செல்வராயினும்" (புறம் 337) எனக் கபிலர் பாடியதனுற் சோழர் கவிகை மண்ணாள் செல்வராய் அவர் காலத்தே விளங்குதலுணரலாம்.

இனி,

"இன்கடுங் கள்ளி னாமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
... ...
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே"
[புறம். 80]

என்னும் பாட்டு, ஆமூரில் ஆமூர் மல்லனைப் பொருதட்ட போர்வைக்கோப் பெருநற் கிள்ளியைச் சாத்தந்தையார் பாடியதாகும். இதன்கண் "ஆமூராங்கண் மல்லன் மதவலி முருக்கி" என்றதனுல், இது பெருநற்கிள்ளி ஆமூரில் ஆமூர் மல்லனெடு பொருத மற்போராகும். இதன் பின்னர்ப் புறத்தின் வைக்கப்பட்ட 81, 82, 83, 84 85, 86 என்னும் எண்ணிலுள்ள 6-பாடல்களும் இப் பெருநற் கிள்ளியைப் பற்றியே வந்தனவேனும், இவையெல்லாம் இச் சோழன் ஆமூர் மல்லனெடு பொருத செய்தியே கூறுகின்றன எனத் துணிதற் கிடனில்லை. "ஆமூர் மல்லனை யட்டு நின்றானைச் சாத்தந்தையார் பாடியது" (80) எனக் கொளுவிற் கூறிய பாட்டொன்றுமே அச் செய்தி குறித்து நிற்பதென்று துணியத்தகும். பின்னர் அவனைப் பாடியது என வருவன 5-பாட்டும் இவனுடைய வேறு வேறு செய்திகளே கூறுவன என்பது மூலத்தை நோக்கி ஆராயலாம், 86-ம் பாட்

டாகிய காவற் பெண்டின் கூற்றும் இச் சோழனையே பற்றிய தென்பது குறுநில மன்னர் பாடல் வரிசை தொடங்கும் 87-ஆம் புறப்பாட்டின் முன்னர், சேரர் பாண்டியர் சோழர் பாடல்களையே முறையாய்க் கோத்து நிறுவிய நிலையிற் சோழர் பாட்டுத் தொகுதியிற் படுதலானன் கறிந்தது. இவனைப் பற்றியுள்ள ஏழு பாடல்களையும் ஒருவ ருற்றுநோக்கின், இவன் மற்போர் முதலிய பல்வகைப்போரினும் அதிக ஊக்கமுள்ளவனென்றும், அதற்காக ஓர் போரவையமைத்து அதன்கட்டன் வென்றியைத் தோற்றுவிக்க முயன்றவன் என்றும் அறியலாம். இவனைப் போர்வைக்கோ என்று கொள்ளலினும் போரவைக்கோ எனக் கொள்வதே இவன் செயலுக் கேற்றதாமெனத் தோன்றுகின்றது. இவ்வாராய்ச்சிக்கு முன்னெல்லாம் யானும் போர்வைக்கோ என்றுதான் கொண்டேன்.

"அடுதோண் முயங்க லவைநா ணுவலே"

[புறம். 83]

என்பதிலுள்ளது போரவையே யாதல் தெளிந்து கொள்க. "தோன்றுவன் மாதோ போர்க் களத் தானே" என்ற இவனைப் பற்றிய காவற் பெண்டின் பாட்டும் இக் கருத்தையே வலியுறுத்தல் தெளிக" இவனை "மையணற் காளை" (ஷ 83) எனப் பாடுதலான் இவன் இளையனுதல் நன்குணரலாம். தன் இளமைக்கும் வலிமைக்கும் அரசுச் செல்வத்திற்கு மேற்ப இப் போர் விளையாட்டிலே ஊக்கி நின்றவனிவன் ஆவன். இவன் ஆமூர் மல்லனை யட்ட போது கூறுமிடத்து "மல்லற் கடந்தடு நிலையே தித்தன் காண்க"

(80) என்றதனால் இச்சோழன் தித்தனோடு பகைத்த பின்னரே ஆமூர் மல்லனோடு இவன் மற்போர் புரிந்தனன் என்று நன்கு துணியலாம். அம் மற்போரில் அவனை இச்சோழன் கொன்றானென்பது "மல்லற் கடந்தடு நிலை" என்றதனாற் றெளியப்பட்டதாம். ஈண்டு அடுநிலை கொன்ற நிலையென உரைகாரர் கூறுதல் காண்க. மல்லனைக்கொன்று வெற்றிபெற்ற இப் போரில்,

"ஆடாதென்ப ஒரு சாரோரே
ஆடன் றென்ப வொருசாரோரே"
[புறம். 85]

எனவரும் இருபாற்பட்ட சொற்கே இடனில்லாமை நோக்கிக் கொள்க. மல்லற் கடந்தட்ட நிலையில் ஆடன்றென்று ஒரு சொற் பிறவாதென்றுணர்க. இதனால்,

"என்னைக் கூரிலைதன் மையானும்
என்னைக்கு நாடிஃது தன்மையானும்
ஆடாதென்ப வொரு சாரோரே
ஆடன்றென்ப வொரு சாரோரே
நல்ல பல்லோ ரிருநன் மொழியே
அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மின்
முழாவரைப் போந்தைப் பொருந்தி நின்றி
யான்கண் டனனவ னாடாகுதலே"
[புறம். 85]

பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடிய இப் பாட்டு ஆமூர்ச் செய்தியாகாது பெருங்கோழியூரில் நிகழ்ந்த வேறொரு போரினையே கூறுவதென்று துணியலாம். இதன் கொளுவிற் பெருங்

கோழி நாய்கன் மகள் என்பதனுல் நக்கண்ணையின் பெருங் கோழி யென்னும் ஊரிலிருந்த ஓர் வணிகன் மகளென்று தெளியலாம். இப் போர் பெருங்கோழி யிலே நிகழ்ந்த தென்பது "எம் இல் முழாவரைப் போந்தைப் பொருந்தி யிருந்தியான் கண்டனன்" எனக் கூறுதலான் அறியலாம். எம் வீட்டுப் பனை மரத்தடியைப் பொருந்தி நின்று யான் கண்டேன் என்பதனுல் அவள் வீடுள்ள ஊரிலே இப்போர் நிகழ்ந்ததென்று தெளியத் தகும். இவள் பெருங் கோழி நாய்கன் மகள் எனப் படுதலான் இவளூர் பெருங்கோழியூர் என்று துணிக. குறுங்கோழியூரின் வேறு தோன்றப் பெருங்கோழி எனப்பட்டதாகும். இப் பெருங்கோழியூர் சோணுட்டதாகா தென்பது "என்னைக் கூரிஃ தன்மையானும் என்னைக்கு நாடிஃ தன்மையானும்" எனக் கூறுதலா னன்கு தெளிந்த தாம். இவை யொன்றும் ஆராயாது பெருங்கோழியை உறையூரென்று துணிந்தெழுதினுர் பிறரென்க. இச் சோழன் "புற்கை யுண்டும் பெருந்தோளன்னே" (84) என்பதனுல் நாடிழந்து புற்கை நுகர்ந்திருந்தா னென்று தெரியப்பட்டது. இங்ஙனம் நாடிழத்தற்கு ஒரு பெரும் போரே காரணமாவ தல்லது வேறன்று. இப் பெரும் போர் ஆமூர் மல்லனை ஆமூரிற் கொன்ற போரும், பெருங்கோழியில் அவையோர் ஆடெனவும் ஆடன்றெனவும் கூறிய போரும் போலாது பெரும் படைத் துணைகொண்டு செய்த போராதல் வேண்டு மென்பது தெள்ளிது. இப் பெரும் போரைப் பற்றியே

"ஆர்ப்பெழு கடலினும் பெரிதவன் களிறே
கார்ப்பெய லுருமின் முழங்க லானுவே

யார்கொ லளியர் தாமே ஆர்நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைப்பட் டோரே''

[புறம். 81]

''சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கு மிழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
ஊர் கொளவந்த பொருநனோ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே''

[புறம். 82]

என்னும் இரண்டு பாடல்களும் உண்டாயின வாகும். இவற்றால் ''ஆர்நார்ச் செறியத் தொடுத்த கண்ணிக் கவிகை மள்ளனும், ஆர்புனை தெரியல் நெடுந்தகையுமாகிய இப் போரவைக்கோப் பெருநற் கிள்ளியினுடைய ஊர்கொள ஒரு வீரன் படை. யெடுத்து வந்தானென்றும், அப்போது எழுகடலென ஆர்க்கும் பெரும் படையுடனும், இராக் காலத்து மழையின் முழங்கும் களிற்று நிரையுடனும், இவன் அவனை எதிர்த்துப் போர்த்தொழிலை மிகவும் விரைந்து செய்தானென்றும் தெரியலாம்.

''ஊர் கொள வந்த பொருநனொ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே''

என்றதனால் ஊர்கொள வந்தவன் ஆர்புனை தெரியல் புனைதற்குரிய னல்லாத பிறனென்றும், அவ்வூர் ஆர்புனை தெரிய னெடுந்தகை யுடைய ஊர்தானென்றும் நன்கு துணியலாம். தன்னூர் கொளவந்த பொருநனொடு தான் பொருதானென்பதல்லாது

வேறொருவன் ஊரைக் கொள்ள வந்த வீரனொடு இச் சோழன் பொருதான் எனக்கூறுதல் இயையாதென்க. இதனலிவ் வமயத்து உறந்தை பெருநற்கிள்ளியுடைய ஊராதல் நன்கு துணிக. தொல்காப்பிய உவமவியல் 3-ம் சூத்திர உரையில் இப்பாட்டை எடுத்துக் காட்டிப் பேராசிரியர் "ஒரு கணத்துள்ளே பல வேந்தரை விரைந்து வேறற்கு விரைகின்றது போர்த் தொழில் என்பது தெளியப் பட்டமையின்" என்று விளக்கிச் செல்லுதலான் இச்சோழன் இங்குத் தன்னை எதிர்த்த ஒருவன் தலைமையிற் பலருடன் பொருதான் என்று துணியப்படுதல் காண்க. இளமையானும் பேரரசின் செருக்காலும் அமய நோக்காது, பலருடன் தன்னூர் கொளவந்த ஒரு வீரனொடு விரைந்து பொருதலால் இவன் உடைந்தானென்றும், அதனல் ஊரிழந்தானென்றும் ஈண்டே உய்த்துணரலாகும். இதுதான் இவன் நாடிழந்து வறியனுதற்குக் காரணமென்க, இவ்வாறு ஊர்கொளவந்த பொருநன் ஒருவற்குத் தோற்றதனலே புற்கை யுண்ணுஞ் சிறுமையை யெய்தினன் என்க. பொருநன் கொள்ள வந்ததும் ஆர்புனை தெரியல் நெடுந்தகை யுடையதுமாகிய வூர் உறந்தையே யாதல் பொருத்தமாகும். இந்த உறந்தையை வேண்மானுகிய தித்தனுக் குரியதாகப் புலவர் பாடுதலான் மேற்கூறியவாறு கொள்ளவந்து இவனை வென்று ஊர் கொண்டவன் தித்தனேயாதல் தெள்ளிது என்க. "கவிகை மள்ளன் கைப்பட்டோர் யார்தாம் அளியர்" என்புழிக் கைப்படுவோர் எனற்பாலது விரைவு பற்றிக் கைப்பட்டோர் என வந்ததென்று கொள்க. ஒரு வீரன் இவன் ஊர்கொள வந்து பொருத போர் தெரிந்து இப் போரின் பின்னே புற்கையுண்ணுஞ்

சிறுமையை ஆத்தி மாலை சூடுஞ் சோழன் எய்தினன் என்பதும் அறியப்படுமாயின், அப் போரிற் சோழன் தோற்றானென்றும் வந்த வீரன் வென்றானென்றும் துணிதல் எளிதேயாமென்க இதுவே சோழனுறந்தையைத் தித்தன் உறந்தையெனப் பாடுதற்குக் காரணமெனின் நன்கு பொருந்துமென்க.

ஆமூர் மல்லனை இச் சோழன் கடந்தட்ட நிலையை "நல்கினும் நல்கானாயினும் போரருந் தித்தன் காண்க" (புறம் 80) என்புழித் தித்தன் கொள்ள வந்து வென்று கொண்ட இச் சோழனூரினைச் சோழனுடைமை யாதல் குறித்து நல்கினும், தான் வென்றுகொண்டது குறித்து நல்கானாயினும், வெல்லற்கரிய போரினையுடைய அத் தித்தன் காண்பானாக என்று பொருள் படுதல் நோக்கிக் கொள்க. உண்மையான வீரம் பற்றி யுவக்கினும் பகைமை பற்றி உவவானாயினும் தித்தன் காண்க. கண்டால் இச் சோழற்குத் தித்தன் அஞ்சுவன் என்பது கருத்தெனினு மமையும். நல்கினும் நல்கானாயினும் இப் போரினைக் கண்டால் இவன் சோழனுடைய வலிமைக்கஞ்சி தித்தன் தானே ஊரை விட்டோடுவன் என்பது கருத்தாகக் கொள்வது நன்கு பொருந்தும்.

"ஊர் கொள வந்த பொருநனொ,
டார்புனை தெரிய னெடுந்தகை போரே"

எனவும் "தித்தன் காண்க" எனவும் பாடியவர் சாத்தந்தையாரே யாதலும், ஆண்டுப் போரருந் தித்தன் போர் வெலற் கருந்தித்தன் என்றதும் நோக்கி இப் போரிற் றித்தனே வென்றானென்று துணியக்

கிடத்தல் காண்க. இவற்றான் வேண்மான் நித்தனுக்கு உறந்தை உரியதாகக் கூறிய முறையையுணரலாம். எங்ஙன நோக்கினும் தித்தன் வேளாதலல்லது சோழனாகான் என்க.

பெருமுடி வேந்தர் சிற்றரசர்க்குப் போரிற் றொலைந்து நாடிழந்ததுண்டென்பதும் பின்னே அவரைப் பெருமுடி வேந்தர் மரபிலொருவன் வென்று இழந்த நாடு தருதலுண்டென்பதும்

"குடாஅ
திரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூ ணன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன;

[அகம். 199]

என வருங் கல்லாடனார் பாட்டானன் குறியலாம். பதிற்றுப் பத்துள் "துளங்குகுடி திருத்திய ... நார்முடிச்சேரல்" என்று கூறுதல் காண்க. இதனான் வேளிர்கள் ஒவ்வோர் காலத்துப் பெருமுடி வேந்தரை வெல்லும் வலியுடையராய் விளங்கியது உய்த்துணரலாம்.

இனிப் பரணர், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திற் பாடிய செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்துள் ஐந்தாம் பத்தாற் பாடிப் பரிசில் பெற்றவர் ஆவர்.

பரணர் ஐந்தாம் பத்தின் (4)

"மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுத றடிந்து"

என்பதனுற் கூறிய மோகூரில் வேம்பு முதறடிந்த செய்தியாலே இளங்கோவடிகளும்

''பழையன் காக்குங் குழைபயிலெனடுங் கோட்டு
வேம்புமுத றடிந்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய கேட்டருள்''
[நீர்ப்படை. 124-26]

எனப் பாடுதலான் பரணர் பாடிய சேரன்றன் இளங்கோவடிகளாலும் பாடப் பட்டவனென்பது நன்கு துணியப்படும். பரணர் பாடிய இச்செங்குட்டுவன் காலத்து உறையூர், பெருங்கிள்ளி யென்னுஞ் சோழனுக்கே யுரியதா யிருந்ததென்பது, சிலப்பதிகாரப் பதிகத்தை யடுத்துள்ள உரை பெறு கட்டுரையில் "அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானு மிவளோர் பத்தினிக் கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே''

என வருதலான் அறியலாம். அடியார்க்கு நல்லார் இதனுரையிற் ''சோழநாட்டு உறையூரிடத்தே பெருநற்கிள்ளி யரசனுகிய வளவன்" என விளங்கவுரைத்தலான், இவ்வுறையூர்ச் சோழன் பெருநற்கிள்ளி எனப் பெயர் பெறுதல் உணரலாம். இவனைப் போரவைக்கோப் பெருநற்கிள்ளி யெனினமையும். இவனே செங்குட்டுவனுக்கு மைத்துனன் வளவ னென்பதும், இவன் இளையனு யரசெய்தியவ னென்பதும். இவன் இளவரசு பொருது தாயத்தாராகிய "ஆர்புனை தெரியலொன்பது மன்னர் இவனெடு கலகப்பட்டுப் போர்க்கெழுந்தபோது அவரை நேரிவாயிலிற் செருவென்று

செங்குட்டுவன் தன் மைத்துன வளவனை அரசுநிலை நிறுத்தின னென்பதும் சிலப்பதிகாரம் நீர்ப்படைக் காதையில்,

"நின், மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பின ரொன்பது மன்னர்
இளவரசு பொறார் ஏவல் கேளார்
வளநாட ழிக்கு மாண்பின ராதலின்
ஒன்பது குடையு மொருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்" (117-23)

என வருதலானும், நடுகற் காதையுள்

"ஆர்புனை தெரிய லொன்பது மன்னரை
நேரிவாயி லிலைச் செரு வென்றோய்" (116-17)

என வருதலானும் அறியப்படுதலான், இப் பெருநற்கிள்ளி முதற்கட் போரிற் றளர்ந்து வறியனுயினன் என்பதும், பின்னர்ச் செங்குட்டுவன் இவனுக்குத் துணையா யுதவிநின்று, பகையரசர் பலரை நேரிவாயி லில் முறியடித்துச் சிறந்தனன் என்றுட் இவற்றானறியக் கிடத்தல் காண்க. சோழன், வளவன், சென்னி, செம்பியன், கிள்ளி எனச் சோழரையே கூறும் பெயர்களில் ஒன்றையேனும் அவர்க்குரிய அடையாளப் பூவையேனும் அவர்க்குரிய கொடியையேனும் இத் தித்தனுக்குப் புலவ ரெவருங் கூறுமை பாடல்களில் நோக்கிக் கொள்க. தித்தனைப் பாடிய புலவர் பரணர் உறையூர் முதுகூற்றனுர், நக்கீரர் என்னு மூவரே யாவர். இவருட் பரணர் தித்தனுறந்தை யென்றுர். உறையூர் முதுகூற்றனுர் சோழருறந்தை யென்றுர். நக்கீரனுர் தித்தனுறந்தை யெனவும் சோழருறந்தை

யெனவுங் கூறினர். ஊர் யாரையுஞ் சார்த்திவரப் பெறுமென்பது தொல்காப்பியனுர் கருத்தென்று மேலே விளக்கினேனுதலால் அஃதொன்றே கொண்டு துணியலாகாமை நன்குணரலாம்.

"சாறுதலைக் கொண்டென" (புறம். 82) என்னும் பாட்டினை எடுத்துக்காட்டி உவமவியலிற் பேராசிரியர் கூறிய உரைநடையில், உண்டாட்டும் கொடையும் உரநோக்கி மறுத்தலும் முதலாகிய உள்ளக் கருத்தினுல் "ஒருகணத்துள்ளே பலவேந்தரை வேறற்கு விரைகின்றது போர்த் தொழில் என்பது தெளியப்பட்டமையான்" என்றுரைத்தியதனையும் இதற்கேற்ப நோக்கிக் கொள்க. ஈண்டுப் பகைத்த தாயவேந்தர் களியாட்டும், பிறனுக்குக் கொடுத்தலும் தாயவுரிமையும் ஒன்று சேர்ந்த நிலையிலுண்டாகிய வலியான் மறுத்தலும் முதலாயின பற்றித் தன்னுள்ளத்து நினைத்தலால் இங்ஙனம் உள்ள பகைவேந்தர் பலரையும் ஒரு கணத்தே ஒருங்கு வெல்லற்குப் பெருநற்கிள்ளி போர்த் தொழில் விரைகின்றதென்று பேராசிரியர் கருதியது புலனுகும். கொடையும் மறுத்தலும் என்றது ஒருவற்குக் கொடுத்து ஒருவற்கு மறுத்தலாகும். ஈண்டு அந்நியனுக்குக் கொடுத்து உரியவனுக்கு மறுத்தலே நலமுடையதாதல் உணர்க.

முதலில் வென்றதாய வேந்தர் தித்தன் படைத்துணையாற் பொருது வென்றிருத்தலாகும். முதலில் வென்றவர் ஒன்பதின்மராதலால் அவரெல்லாரும் உறையூரையாளுத லியையாமையாற் றமக்குத் துணையாய் நின்ற தித்தனை உறையூரில் நிறுவித் தாம் வேறு

வேறிடங்களில் இருந்தனரென்று நினையலாம். செங்குட்டுவன் இவரை யெல்லாம் வென்றது உறையூர்த் தெற்கணுள்ள நேரிவாயிலென்னு மிடத்தாதலின் இப் போர் உறையூரை யடுத்து நிகழ்ந்ததென்று துணியலாம். நேரிவாயில் உறையூர்த் தெற்கில் வாயிலதோரூர் என்று அரும்பதவுரைகாரர் கூறினார். இங்ஙனம் செங்குட்டுவன் தன் மைத்துனனுக்கு உதவுதற்கு முன்னேதான் இப் பெருந் தடுமாற்றஞ் சோணாட்டில் நிகழ்ந்ததென்றும், அவ்வமயந்தான் வேண் மகனை நித்தன் உறையூரிற் புக்கனனென்றும் நன்கு தெளியலாம்.

இலக்கியத் தொகை நூல்களிற் "கூகைக் கோழி வாகை" (குறுந். 393) எனவும் "வண்கை யெயினன் வாகை" (புறம். 351) எனவும் வருவன காணலாம். இவ் விரண்டனுள் முன்னதைக் கூகைக் கோழியார் என்னும் புலவருள்ள வாகையூர் எனவும் பின்னுள்ளதை வண்மைக் கையினையுடைய எயினன் என்னும் சிற்றரசனுடைய வாகையூரெனவும் கொள்ளத் தகுமென்றுணர்க. கூகைக் கோழியார்க்கு இப் பெயர் வந்தது அவர் பாடிய புறப்பாட்டில் (364)

"மூதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானாத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே"

என்புழிக் கூகைப் பேடையைக் கோழியென்று வழங்கிய அரிய தொடர் பற்றியாமென வெளிதிலறியலாகும். இவர் புலவரென்று நன்கு தெளியப் பட்டதனாற் கூகைக் கோழியுள்ள வாகை யென்று யாம்

கொண்டு, வாகை எயினற் குரியதுதானென்று துணிவது போல, வெளியி லொருவனென்று துணியப்பட்ட திதனுறந்தை, சோழருறந்தை என்னுமிடங்களிலும் திதனுள்ள உறந்தை எனவும் சோழர்க்குரிய உறந்தை எனவும் கொள்ளவே தகுமென்றுணர்க. எயினன் வாகையினைக் கூகைக்கோழி வாகையென்று குறுந்தொகையிற் பாடியவர் "திதனுறந்தை" யென்று பாடிய பரணரே யாதல் கண்டு நினைந்து கொள்க. இங்ஙனம் பாடிய இப் பரணர் சோழ வேந்தருரை ஆண்டு வதிதல் கருதி திதன் என்னும் வண்ணைகப் போர்வீரனை வேளூராகப் பாடுதலியல்பே என்றுணர்க. இங்ஙனங் கருதிக் கொள்ளாது வாகை யென்னும் ஊரையே துணையாய்க் கொண்டு கூகைக் கோழி மகன் எயினனாவன் அல்லது எயினன் மகன் கூகைக் கோழியாவன் அல்லது கூகைக் கோழியை வென்று வாகையூரை எயினன் கொண்டனனாவன் என்றாற் போன்ற கதைகளை ஆதாரமின்றி யுண்டு பண்ணுதல் எவ்வளவு நகை விளைக்குமோ அவ்வளவே யாகும் உறந்தை ஒன்றே கொண்டு திதனைச் சோழர் முதல்வனாக்கி எழுந்தன பலவுமென்க.

இனிப் பரணர், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியும் போர்க்களத்துப் பொருது பட்டது கண்டு அவரைப் பாடிய 63-ஆம் புறப்பாட்டில்,

"என்னாவது கொலவ ரகன்றலை நாடே"

என வருவது தெரியலாம். இதனால் இப் பரணர் காலத்துச் சோழனொடு வேற்பஃறடக்கைப் பெருநற்

கிள்ளிய தாதல் தெள்ளிது. பரணர் பாடிய தித்தன் காலத்துப் பெருநற்கிள்ளி போரவைக்கோப் பெருநற் கிள்ளி என்பது "பெருநற்கிள்ளி ஆமூர் மல்லனை அட்டு நின்ற நிலையைத் தித்தன் காண்க" எனக் கூறிய புறப் பாட்டான் (80) அறிந்ததேயாம். இப் பெருநற்கிள் ளியை வேற்பஃறடக்கையால் விசேடித்தது, இவர் வேலைப் பலபல விரகாக (சாதுரியமாக)த் தன் பெருங் கையால் உபயோகிக்கும் ஆற்றல் பற்றியாமென் றுணரலாம். இங்ஙனமல்லாது பல தடக்கை யுண் டென்பது பொருந்தாமை காண்க. போரவையில் இவன்பாற் கண்ட சிறப்பால் இவனுக் கிப்பெயருண் டாயதென்று துணிவது தகும். இதனாற் செங்குட்டு வன் மைத்துனனாகிய போரவைக்கோப் பெருநற் கிள்ளியும் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியும் செங்குட்டுவனைப் பாடிய பரணர் தித்தனைப் பாடுங் காலத்திருந்த ஒரே சோழனென்று நன்கு தெளிக. இவன் போரில் இறந்தது குறித்து என்ன வருத்த முறுவதோ தான் இவன் நாடு என்று பரணர் வருந் திப் பாடுதலான் (புறம். 63) இப் போர்வைக் கோப் பெருநற்கிள்ளி முதலில் நாடிழந்து புற்கையுண்ட நிலையின் மாறிப் பின் அரசெய்திச் சோணாட்டைச் செவ்வனம் ஆண்டிருந்தனன் என்பது நன்கு புலனா கும். இவன் இறந்ததனை யென்னுவது இவன் நாடென்று கருதியிரங்கிய பரணர்க்கு அவன்நாட்டை நன்றாண்டது நினைவாதல் தெள்ளிதென்க. பரணர் கருத்துப்படிச் சோணாடு பெருநற்கிள்ளியினுடைய தாயின், அந்நாட்டூரெல்லாமும், அவற்றிற் சிறந்த தலைநகருள்ளிட்ட வேள்மகனாகிய தித்தனுடையதி யாங்ஙனமென்க.

இனிப் பரணர் நற்றிணையிற் பாடிய "சிறுகோற சென்னியா ரேற்றன்ன" (265) என்னும் அடியிற் "சிறு கோற் சென்னி" என்ற தொடரைச் சில வூர்க ளளவே ஆளுஞ் செங்கோலையுடைய சோழன் என்று பொருள் கொண்டு, பரணர் காலத்துச் சோழர் சிறு நிலையிலிருந்து பின்னர் பெருகினரென்று ஒரு கதை கட்டினூர் உண்டு. இது சிறு கோல் என்பதன் பொருள் இன்னதென்று தெரியமாட்டாமையாலுண் டாகிய தவறேயாம். சிறுகோல் என்பது குதிரையை விரையச் செலுத்தற்குக் கையிலேந்திய முட் கோல் என அவரறிகிலார். சோழன் "கண்ணார் கண்ணிக் கலிமான் வளவன்" (புறம். 39) எனப்பாடுதலால் அவன் பரியை விரையச் செலுத்தும் சிறு கோலை அடிக்கடி கையிலேந்தி நிற்ற லியல்பே யாகும். இவ் வழக்கம் அரசர்குல மக்கள்பாலின்றுங் காணலாம். "சிறு கோலுளையும் புரவி" (புறம். 352) என இந் நற்றி ணைப் பாட்டுப் பாடிய பரணரே பாடிக் காட்டுதலான் இதனுண்மை யுணர்க. இதனாற் பரணர் காலத்தே சோழர் சிறுநாடுடையராகாது "அகன்றலை நாடு" (புறம். 63 பரணர் வாக்கு) என்று பெரிய இடங் கொண்ட நாட்டினராக விருந்தது நன்கு புலன் கொள்க. பரணர் போலவே கண்ணகி காரணமாகப் பேகனைப் பாடிய பெருங்குன்றூர் கிழார்,

"நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்
வான்றோய் நீள்குடை வயமான் சென்னி"
(புறம். 266)

எனப் பாடியதனை முன்னரே காட்டினேன்; அதனையும் ஈண்டைக்கேற்ப நோக்குக.

இனிப் பட்டினப்பாலையுள், திருமாவளவன் செங்கண்ணாற் செயிர்த்து நோக்கி "புல்லிய இடையர்வழி பொன்றவும் ஐம்பெரு வேளிர் குலமுழுதுஞ் சாயவும் செய்து வளம் பெருக்கி உறந்தையைத் திருத்தினான் என்பது,

"மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்து நோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேள் மருங்குசாயக்
காடு கொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தைபோக்கி
வாயிலொடு புழை யமைத்து"

என்பன முதலாக வருவனவற்றான் அறியப்படும். ஈண்டு இருங்கோவேள் மருங்குசாய என்பதற்கு நச்சினார்க்கினியர் "ஐம்பெரும் வேளிர் குலமுழுதுங் குறைய" என்று பொருள் கூறினார். திருமா வளவன் பிறர் பிணி யகத்திருந்து முதலிற் சிறுமை யெய்தியது பட்டினப்பாலையுள் (அடி. 22) முதலிற் கூறப்பட்டது. இவன் பிணியகத்திருந்த காலம் இடையரும் வேளிரும் முறையே நாட்டிலும் ஊரிலும் புக்கு அவற்றைக் கைப்பற்றி யிருத்தற்கு நல்ல அமையமாதல் அறியலாம். வேளிருள் இருங்கோவேள் மரபினர் உறந்தை யடுத்து அதன் கீழ்பாலுள்ள பிடவூரில் இருந்தனர் என்பது,

"உறந்தைக் குணாஅது,
நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்"
(புறம். 395)

என்பதனுலறிந்தது. ஆண்டிருந்த வேளிரு ளொருவனுன நித்தன், திருமாவளவன் பிறர் பிணி யகத்திருந்த அமயத்து உறையூர் புக்கு அதனையுங் கைப்பற்றுதல் எளிதேயாமென்க. உறையூரிலிருந்த சோழர் தாய வழியினனுகிய பெருநற்கிள்ளி, நித்தனுல் எளிதில் வெல்லப்பட்டு நாடிழப்பிக்கப் பட்டா னெனினு மமையும். நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியுந் தம்முட் கலகப்பட்ட நிலையையும் ஈண்டைக்கே நினைக்க. போர்வைக்கோப் பெருநற்கிள்ளி புறங்கை யுண்ணுஞ் சிறுநிலை யெய்திய காலமோ, சோழர் குடிக்குரிய ஒன்பதின்மர் செங்குட்டுவன் மைத்துன வளவனோடு கலகப்பட்டிருந்த காலமோ, சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பகைத்துப் பொருத காலமோ, திருமாவளவன் பிறர் பிணியகத்திருந்த காலமோ வேளிர் தலைமை பெற்ற காலமென்று ஒரு தலையாகத் துணியப்படாவிடினும், சோழர் தமக்குள் உட்பகையுற்ற இவ்வமயந்தான் வேளிர் தலைநகரினும் புக்குவதிதற்குரிய வமயம் என்றுய்த் துணரலாகும். கணையனைப் பாடிய பரணர் காலம் கணையனை வென் றகப்படுத்திக் கழுமலங் கொண்ட சோழன் செங்க ணுன் காலம் ஆம் என்பதை முன்னரே காட்டினேன். கணையன், கட்டி, நித்தன் இம் மூவரும் பரணர் காலத் தவரென்பது முன்னரே தெரிவிக்கப்பட்டது.

மற்றுத் நித்தனைச் சிறப்பித்து நின்றன பலவும் அவனைப் பெருமுடி வேந்தனெனவே கொள்ளற்கு வந்தனவென்று கூறலாகாமை இவ் விசேடணங்க ளெல்லாம் குறுநில மன்னர்க்கும் படைத் தலைவர்க் கும் ஒப்ப வருதல் நோக்கி நன்குணரலாம். இதனுண்

மையைச் "சினங்கெழுதானைத் தித்தன்" (பரணர் அகம். 152) மறங் கெழுதானைக் கொற்றக் குறும்பியன் (அகம். 262) எனவும்,

"மழைவளந் தரூஉ மாவண் டித்தன்"
(அகம். 6)

"மழைசுரந் தன்ன வீகை வண்மகிழ்க்
கழறொடித் தடக்கைக் கலிமான் வள்ளி"
(கபிலர் அகம். 238)

எனவும்,

"நுண்கோ லகவுநர்ப் புரந்த பேரிசை ... தித்தன்"
(அகம். 152)

"அகவுநர்ப் புரந்த ... நன்னன்
(அகம் 97)

"பாய்பரி நன்மாத் தித்தன்"
"செருவிய னன்மான் தித்தன்"
(பரணர் அகம். 262)

எனவும்,

"சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்'
(புறம். 152)

"வெண்கோட் டியானைப் போஓர் கிழவோன்
... ... பழையன்"

எனவும் வருவன கொண்டுணர்க.

குறுந்தொகை 284 ஆம் பாடல் பாடிய புலவன் மிளைவேள் தித்தன் எனப்படுவான். இப் பெயர் வேள் தித்தன் என்பதற்கியையவே உறையூரிலிருந்த தித்தன் வேண்மான் தித்தன் எனப்படுதல் காண்க. இதனானும் தித்தன் என்பது வேள்குடியில் வழங்கிய பெயராதல் துணியலாம்.